ஓம்

ஸ்ரீ பரமாத்மனே நம :

பதினாறாவது அத்தியாயம்

தேவாசுர சம்பத்து விபாக யோகம்

யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் தனது கேள்வியை எழுப்பும் விதமே ஒரு தனிப் பாணியாகும். முதலில் அத்தியாயத்தின் சிறப்புகளை விளக்கி புருஷரை அதன்பக்கம் ஈர்த்து விடுகிறார். அதன் பிறகு அத்தியாயத்தைத் தெளிவாக எடுத்துரைக்கிறார். எடுத்துக் காட்டாக கர்மத்தை எடுத்துக் கொள்வோம். இரண்டாவது அத்தியாயத்திலேயே 'அர்ஜுனா ! கர்மத்தைச் செய்' என்று ஊக்குவிக்கிறார். மூன்றாவது அத்தியாயத்தில் நியமிக்கப்பட்ட கர்மத்தைச் செய் என்று கோடிட்டுக் காட்டுகிறார். நியமிக்கப்பட்ட கர்மம் எது? என்றால் வேள்வியின் செய் முறை அல்லது உபாயம், கர்மம் என்றார். பிறகு அவர் வேள்வியின் உருவத்தைக் கூறாமல் வேள்வி எங்கிருந்து வந்தது? எதைத் தருகிறது? என்பதை முதலில் கூறுகிறார். நான்காவது அத்தியாயத்தில் பதின்மூன்று, பதினான்கு விதிகளில் வேள்வியின் உருவத்தை தெளிவாக விளக்கி அதன் செயல் முறைதான் கர்மம் என்றார். இக்கர்மத்தின் உண்மையான பொருள், மனம் புலன்களின் ஒருமித்த செயலினால் நிறைவேற்றப்படும் யோக சிந்தனையும் ஆராதனையும் ஆகும் என்று தெளிவாக்குகிறார்.

இதுபோன்று ஒன்பதாவது அத்தியாயத்தில் அவர் தெய்வீக, அசுர சம்பத்துகளின் பெயர்களைக் கூறினார். அவற்றின் சிறப்புகளை வலியுறுத்தியபடி அவர் கூறியதாவது :

அர்ஜுனா ! அசுர சுபாவம் உள்ளவர்கள் என்னைத் துச்சமாகக் கருதி அழைக்கின்றனர். நானும் மனித உடலை ஆதாரமாகக் கொண்டவன். ஏனெனில் மனித உடலில்தான் எனக்குத் தெய்வீக நிலை கிட்டியது. அசுர சுபாவம் கொண்டவர்கள். மூட சுபாவம் உடையவர்கள் என்னைப் பூஜிப்பதில்லை. தெய்வீக சம்பத்துகளுடன் கூடிய பக்தர்கள் அதிகமான சிரத்தையுடன் என்னை உபாசிக்கிறார்கள். ஆனால் இந்த சம்பத்துகளின் வடிவம், அவற்றின் அமைப்பு ஆகியவற்றைப் பற்றிக் கூறிவில்லை. இந்த பதினாறாவது அத்தியாயத்தில் யோகேஷ்வர் அவற்றின் உருவத்தை விளக்கியவாறு தெய்வீக சம்பத்தைப் பற்றி முதலில் கூறுகிறார்.

ஸ்ரீ பகவான் கூறுகிறார் :

அபயம் ஸத்த்வ-ஸம்சுத்திர்-ஜ்ஞான-யோக- வ்யவஸ்த்திதி:
தானம் தமஸ்ச யஜ்ஞஸ்ச ஸ்வாத்த்யாயஸ்-தப ஆர்ஜவம் 1

அஞ்சாமை, உள்ளத்தில் தூய்மை, ஞானத் தத்துவத்திற்காக யோகத்தில் நிலைத்திருத்தல், எல்லாவற்றையும் சமர்ப்பணம் செய்தல், புலன்களை அடக்குதல், வேள்வியை அனுஷ்டித்தல் (நான்காவது அத்தியாயத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியபடி) சம்யம் அக்கினியில் ஹோமம், இந்திரியாக்னியில் ஹோமம், பிராண-அபானத்தில் ஹோமம், கடைசியில் மனம் புலன்களின் உள் செயலினால் மட்டுமே ஏற்படும் ஆராதனையின் செயல்முறை என்ற ஞானாக்கினியில் ஹோமம், (எள், அரிசி, வைதீகச் சடங்குகளுக்கான மேடை ஆகியவற்றுடன் செய்யப்படும் வேள்விக்கும் யோகேஷ்வர் இந்த கீதையில் சொன்ன வேள்விக்கும் சம்பந்தமே இல்லை. ஸ்ரீ கிருஷ்ணர் அத்தகைய கர்மகாண்டத்தை வேள்வி என்று ஒப்புக் கொள்ளவில்லை). ஸ்வாத்யாயம் அல்லது தனது வடிவை நோக்கிச் செல்ல வழிவகுக்கும் அத்யயனம், தவம், அதாவது மனத்துடன் கூடிய புலன்களை இஷ்ட தேவதைக்கு ஏற்ப ஈடுபடுத்துதல், உடல், புலன்கள், உள்ளம் ஆகியவற்றின் எளிமையாகும்.

அஹிம்ஸா ஸத்ய-மக்ரோதஸ் த்யாக: சாந்தி-ரபைஷீனம்
தயா பூதேஷ்-வலோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீ-ரசாபலம் 2

அகிம்சை என்ற ஆன்மாவின் உத்தாரணம் (ஆன்மாவை அதோ கதிக்கு இழுத்துச் செல்லுதல் ஹிம்சை ஆகும். ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார் -- நான் கவனமாகக் கர்மங்களில் ஈடுபடாவிட்டால் இந்த சம்பூர்ண குடிகளையும் கொல்பவனாகவும், சாதிக்கலப்பின் கர்த்தாவாகவும் ஆவேன். ஆன்மாவின் உண்மையான பொருள் பரமாத்மா. அதன் படைப்பில் திரிதல்தான் சாதிக்கலப்பு, ஆன்மாவின் ஹிம்சை ஆகும்.

ஆன்மாவின் உத்தாரணம் அஹிம்சை ஆகும்) சத்தியம் (சத்தியத்தின் பொருள் உண்மையும் இனிமையுமான பேச்சும் ஆகும். இந்த ஆடை என்னுடையது என்று நீங்கள் சொன்னால் அது உண்மையா? இதைவிடப் பெரிய பொய் என்னவாக இருக்க முடியும்? உடலே உங்களுக்குச் சொந்தமானது இல்லை, அழியும் பொருள் என்றிருக்கும்போது இதை மூடும் உடை எப்படி உங்களுடையதாக இருக்கும், இருக்க முடியும்? சத்தியத்தின் வடிவை யோகேஷ்வரே விளக்கும்பொழுது, ''அர்ஜுனா! உண்மைப் பொருள் மூன்று காலத்திலும் நிலைத்து நிற்கும். இந்த ஆன்மாதான் சத்தியம், இதுவே பரம சத்தியம் -- இந்த சத்தியத்தில் நாட்டம் வை'' என்று கூறுகிறார்.) கோபமின்மை, எல்லாவற்றையும் சமர்ப்பணம் செய்தல், நல்ல-கெட்ட கர்ம பலன்களை விடுத்தல், சித்தத்தில் சஞ்சலமே இல்லாமை, இலட்சியத்திற்கு மாறான நிந்தனைக்குரிய காரியங்களைச் செய்யாதிருத்தல், எல்லாப் பிராணிகளிடத்தும் இரக்கம் காட்டுதல், யோகங்களில் புலன்கள் லயிக்கும் போதும் அவைகளில் வேட்கை இல்லாமை, மென்மை, இலட்சியத்திலிருந்து தவறும்பொழுது வெட்கமடைதல், வீணாண செயல்கள் செய்யாமை – ஆகியவைகள்.

தேஜ: க்ஷமா த்ருதி: ஸௌச-மத்ரோஹோ நாதிமானிதா
பவந்தி ஸம்பதம் தைவீ-மபிஜாதஸ்ய பாரத 3

ஒளி, (அது ஈஸ்வரனிடம் மட்டுமே உள்ளது. அந்த ஒளியின் பிரகாசத்தினால் எவன் செயல் செய்கிறானோ அவனே ஞானி. மகாத்மா புத்தரின் பார்வை விழுந்ததுமே அங்குலிமாலியின் எண்ணம் மாறிவிட்டது. இது புத்தரிலிருந்து எழுந்த நன்மை பயக்கும். அந்த ஒளியின் (பிரகாசத்தின்) விளைவே. பொறுமை, தைரியம், பவித்திரம், யாரிடமும் பகைமை கொள்ளாமை, தற்பெருமை இல்லாமை, இவைகள் எல்லாம் நான் தெய்வீக சம்பத்துகளைப் பெற்ற புருஷனின் இலட்சணங்களாகும். இவ்வாறு மொத்தம் இருபத்து நான்கு இலட்சணங்களைக் கூறினார். உங்களிடமும் அம்சமாக இவையிருக்கின்றன. அசுர சம்பத்துகளைக் கொண்ட மனிதர்களிடமும் இந்த குணங்கள் தூங்கும் நிலையில் உள்ளன. எனவே, கொடும்பாவியும் நன்மை செய்ய முடியும். இப்பொழுது அசுர சம்பத்துக்களின் லட்சணங்களை கூறுகிறார்.

தம்ப்போ தர்ப்போபி மானஸ்ச க்ரோத: பாருஷ்ய மேவ ச
அஜ்ஞானஞ் சாபிஜாதஸ்ய பார்த்த ஸம்பத-மாஸுரீம் 4

பார்த்தா! பகட்டும், இறுமாப்பும், தற்பெருமையும், சினமும், கடுமையான சொல்லும், அஞ்ஞானமும், அசுர சம்பத்தை உடையவனாய்ப் பிறந்தவனின் இலட்சணங்கள் ஆகும். இந்த இரண்டு சம்பத்துகளினால் என்ன பயன்?

தைவீஸம்பத் விமோக்ஷாய நிபந்த்தாயாஸுரீ மதா
மா ஷீச: ஸம்பதம் தைவீ மபிஜாதோஸி பாண்டவ 5

இந்த இரண்டு சம்பத்துகளில் தெய்வீக சம்பத்து சிறந்த மோட்சத்திற்காக என்றும், அசுர சம்பத்து பந்தங்களுக்காக என்றும் கருதப்படுகின்றன. அர்ஜுனா ! நீ வருந்தாதே. ஏனெனில் நீ தெய்வீ சம்பத்து பெற்றவனாவாய். உனக்குச் சிறந்த மோட்சம் கிடைக்கும். அதாவது என்னை அடைவாய். அந்த சம்பத்துக்கள் எங்கிருக்கின்றன?

த்வௌ பூத-ஸர்க்கௌ லோகேஸ்மின் தைவ ஆஸுர ஏவ ச
தைவோ விஸ்தரஷ: ப்ரோக்த ஆஸுரம் பார்த்த மே ஸ்ருணு 6

அர்ஜுனா ! இந்த உலகத்தில் ஜீவன்களின் சுபாவம் இரண்டு வகையானவை. அவைகள் தேவர்கள் போலவும், அசுரர்கள் போலமுமாகும். இதயத்தில் தெய்வீக சம்பத்து செயல்வடிவம் பெறும் சமயம் மனிதன் கடவுளாகிறான். அசுர சம்பத்து அதிகமாகும் பொழுது மனிதன் அசுரனாகிறான். சிருஷ்டியில் இரண்டே சாதிகள் இருக்கின்றன. அரபு நாட்டில் பிறந்தாலும் சரி, ஆஸ்திரேலியாவில் பிறந்தாலும் சரி, வேறு எங்கு பிறந்தவனாயிருந்தாலும் சரி, அவன் மனிதனாக இருக்கட்டும். இதுவரை தேவர்களின் சுபாவம் விரிவாகச் சொல்லப்பட்டது. இப்போது அசுரர்களின் சுபாவத்தை என்னிடமிருந்து கேள்.

ப்ரவ்ருத்திஞ்ச நிவ்ருத்திஞ் ச ஜனா ந விது ராஸுரா:
ந ஷௌசம் நாபி சாசாரோ ந ஸத்யந் தேஷுவித்யதே 7

அர்ஜுனா ! செய்யத் தகுந்த நல்ல செயல்களையும், செய்யத் தகாத செயல்களையும் அசுரர்கள் அறியார். எனவே அவர்களிடம் தூய்மையும், நல்ல ஒழுக்கமும், வாய்மையும் இருப்பதில்லை. அத்தகைய புருஷர்களின் எண்ணங்கள் எப்படி இருக்கும்?

அஸத்ய-மப்ரதிஷ்ட்டந் தே ஜக-தாஹுரநீஸ்வரம்
அபரஸ்பர-ஸம்ப்பூதம் கிமன்யத் காம-ஹைதுகம் 8

உலகம் ஆதாரமற்றது. பொய்யானது. கடவுள் இல்லாதது. ஆண், பெண் இணக்கத்தால் உண்டானது என்றும், இத்தகைய போகத்தை அனுபவிப்பதைத் தவிர வேறு என்ன இருக்கிறது என்றும் கூறுகின்றனர்.

ஏதாந் த்ருஷ்டி-மவஷ்டப்ப்ய நஷ்டாத்மானோல்ப-புத்தய:
ப்ரபவந்த்-யுக்ரகர்மாண: க்ஷயாய ஜகதோஹிதா: 9

இத்தகைய பொய்யான கொள்கையை உடைய புல்லறிவாளர்கள் ஆன்ம இழப்பு ஏற்பட்டவர்களாக, கொடுமையான கர்மங்கள் செய்பவர்கள் உலகின் பகைவர்களாக அதன் அழிவுக்கென்றே தோன்றியிருக்கின்றனர்.

காம-மாஸ்ரித்ய துஷ்பூரம் தம்ப்ப-மான-மதான்விதா:
மோஹாத் க்ருஹீத்வாஸத்க்ராஹான் ப்ரவர்த்தந்தேஷீசி வ்ரதா: 10

அத்தகைய மனிதர்கள் நிறைவேறாத நெடிய காமம் பிடித்தவர்களாய், ஆடம்பரமும், பெருமையும், மதமும் பொருந்திய வர்களாய், மயக்கத்தால் கெட்ட எண்ணங்களைக் கிரகித்து தீய தீர்மானங்களுடன் தொழில் செய்கின்றனர். அவர்கள் தீர்மானத்துடன் செயல் புரிகின்றனர். ஆனால் செயல்கள் தீயவைகளாக இருக்கின்றன.

சிந்தா-மபரிமேயாஞ் ச ப்ரலயாந்தா-முபாஸ்ரிதா:
காமோபபோகபரமா ஏதாவதிதி நிஸ்சிதா: 11

அவர்கள் சாகும் வரையில் அளவு கடந்த கவலைகளுடன் வாழ்கின்றனர். காம நுகர்ச்சி அனைத்திலும் மேலானது, அதாவது அதுவேதான் ஆனந்தம் என்றும் கருதுகின்றனர். எவ்வளவு முடியுமோ அவ்வளவு இன்பம் அனுபவி, இதற்கு மேல் எதுவுமில்லை என்பதுதான் அவர்கள் கருத்து.

ஆஷாபாஷ-ஷதைர்-பத்தா: காமக்ரோத-பராயணா:
ஈஹந்தே காமபோகார்த்த-மன்யாயேனார்த்த-ஸஞ்சயான் 12

நூற்றுக்கணக்கான ஆசையெனும் தூக்குக் கயிறுகளால் கட்டப்பட்டவர்களாக (ஒரு தூக்குக் கயிற்றால் மனிதர்கள் இறந்து விடுகின்றனர். நூற்றுக் கணக்கான தூக்குக் கயிறுகளால் கட்டப்பட்டவர்கள்) காமக் குரோதத்தைப் பாராயணம் செய்து, காம போகத்தின் நிறைவுக்காக அநியாயமான வழிகளில் பொருள், தனம் ஆகியவற்றைச் சேர்க்க முயலுகின்றனர். எனவே செல்வத்திற்காக இரவு பகல் முறைகேடான வழியில் செல்கின்றனர். மேலே கூறுகிறார்கள்.

இத-மத்ய மயா லப்த-மிமம் ப்ராப்ஸ்யே மனோரதம்
இதமஸ்தீதமபி மே பவிஷ்யதி புனர்த்தனம் 13

இன்று இது என்னால் அடையப்பட்டது; இவ்விருப்பத்தை நிறைவேற்றுவேன்; என்னிடம் இத்தனை செல்வம் இருக்கிறது. இருப்பினும் இன்னும் வந்து சேரும்.

அஸௌ மயா ஹத: ஷத்ருர்-ஹனிஷ்யே சாபரானபி
ஈஸ்வரோஹ-மஹம் போகீ ஸித்தோஹம் பலவான் ஸுகீ 14

அப்பகைவன் என்னால் கொல்லப்பட்டவன். மற்ற விரோதி களையும் கொல்வேன்; நான் செல்வத்தையும், போகத்தையும் ஆண்டு அனுபவிப்பவன் நானே-காரிய சித்தன், வலுவுடையவன், இன்பம் துய்ப்பவன், எல்லாமே நான்தான்.

ஆட்யோபிஜனவா-னஸ்மி கோன்யோஸ்தி ஸத்ருஷோ மயா
யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்ய இத்-யஜ்ஞான-விமோஹிதா: 15

நான் செல்வந்தனும் உயர் குலத்தவனும் ஆவேன். எனக்கு நிகரானவன் எவன் இருக்கிறான்? நான் வேள்வி செய்வேன். தானம் கொடுப்பேன். மகிழ்ச்சியாக இருப்பேன். என்று அஞ்ஞானத்தில் மயங்கியிருப்பார்கள். வேள்வி, தானம் அஞ்ஞானமா? இது பற்றி 17ஆம் சுலோகத்தில் விளக்குகிறார். இது மட்டுமின்றி பல மதிமயக்கங்களுக்குப் பலியாகின்றனர். இதுபற்றிக் கூறுகிறார்.

அனேக-சித்த-விப்ப்ராந்தா மோஹஜால-ஸமாவ்ருதா:
ப்ரஸக்தா: காம-போகேஷு பதந்தி நரகேஷீசௌ 16

பலவிதங்களில் மனம் பேதலித்தவர்களாக மோக வலையில் மூழ்கி சிற்றின்பங்களில் அதிகப் பற்று கொண்டவர்களாக அந்த அசுர சுபாவம் கொண்ட மனிதர்கள் பாழும் நரகத்தில் விழுகின்றனர். நரகம் என்னவென்பதைப் பின்பு ஸ்ரீ கிருஷ்ணர் விளக்குவார்.

ஆத்மஸம்ப்பாவிதா: ஸ்தப்த்தா தன-மான-மதான்விதா:
யஜந்தே நாம-யஜ்ஞைஸ்-தே தம்ப்பே-னாவிதி-பூர்வகம் 17

தற்புகழ்ச்சியும், செல்வச் செருக்கும், மதமும் உடையவர் களாகிய அந்த ஆணவம் கொண்டவர்கள் சாஸ்திர விதிகளை கடைப்பிடிக்காமல் யாக விதியிலிருந்து விலகி பெயரளவில் ஆடம்பரத்துக்காக வேள்விகளைச் செய்கின்றனர். இவர்கள் ஸ்ரீ கிருஷ்ணர் கூறிய வேள்வியையா செய்கிறார்கள்?

இல்லை. அந்த விதிகளை மீறுகிறார்கள். ஏனெனில் விதிகளை யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் தானே சொல்லியிருக்கிறார். (அத்தியாயம் 4/ 24-33 அத்தியாயம் 6/10-17).

அஹங்காரம் பலம் தர்ப்பம் காமம் க்ரோதம் ச ஸம்ச்ரிதா:
மாமாத்ம-பர-தேஹேஷு ப்ரத்விஷந்தோ ப்யஸூயகா: 18

அவர்கள் மற்றவர்களை இகழ்பவர்களாகவும், அகங்காரம், பலம், இறுமாப்பு, காமம், குரோதம் ஆகியவற்றைப் பாராயணம் செய்யும் புருஷர்களாகவும் இருப்பதால், தம்மிடமும் பிறர் உடலிலும் அந்தர்யாமியாக பரமாத்மாவாக இருக்கும் என்னை வெறுக் கிறார்கள். சாஸ்திர விதிகள் மூலம் பரமாத்மாவை ஸ்மரணை செய்வதும் ஒரு வேள்வியாகும். யார் இந்த விதிகளைக் கடைப்பிடிக்காமல் பெயரளவில் வேள்வி செய்கிறார்களோ அவர்கள் பிறரின் உடலிலும் தம் உடலிலும் நிலைத்திருக்கும் பரமாத்மாவாகிய என்னை வெறுக்கிறார்கள். மனிதர்களிடம் துவேஷ மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள். அதலிருந்து

தப்பியும் விடுகிறார்கள். இவர்கள் தப்ப முடியுமா? ''இல்லை'' என்று கூறுகிறார்.

தானஹம் த்விஷத: க்ரூரான் ஸம்ஸாரேஷு நராதமான்
க்ஷிபாம்-யஜஸ்ர-மசுபா-னாஸுரீஷ்வேவ யோனிஷு 19

என்னிடம் துவேஷம் கொண்டவர்களை, கொடியவர்களை, கீழ்த்தரமானவர்களை, பாவிகளை பிறந்து இறந்து உழலும் உலகில் அசுரப் பிறவியிலேயே தள்ளுகிறேன். யார் சாஸ்திர விதிகளைக் கடைப் பிடிக்காமல் வேள்வி செய்கிறார்களோ அவர்கள் பாவ யோனிகள், அவர்களே மனிதர்களில் கீழ்த்தரமானவர்கள். இவர்களையே கொடியவர்கள் என்று கூறுகிறார்கள். மற்றவர்கள் கொடியவர்கள் அல்லர். கீழ்த்தரமானவர்களை நரகத்தில் தள்ளுவேன் என்று முன்பே கூறியிருக்கிறார். அதையே இங்கு அவர்களை அப கீர்த்தியுடைய அசுர யோனிகளில் தள்ளுகிறேன் என்று கூறுகிறார். இதுதான் நரகம். சாதாரண சிறைவாசமே பயங்கரமானது என்றால் எப்பொழுதும் அசுர யோனிகளில் தள்ளுகிறேன் என்று கூறுகிறார். இதுதான் நரகம். சாதாரண சிறை வாசமே பயங்கரமானது என்றால் எப்பொழுதும் அசுர யோனிகளில் விழுவது என்பது எத்தனை கொடியது? எனவே தெய்வீக சம்பத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும்.

ஆஸுரீம் யோனி-மாபன்னா மூடா ஜன்மனி ஜன்மனி
மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்-யதமாம் கதிம் 20

குந்தி மகனே ! மூடர்கள் பல பிறவிகளில் அசுர யோனிகளில் தோன்றி என்னை அடையாமல் இன்னும் கீழான கதியையே அடைகிறார்கள். அதன் பெயர்தான் நரகம். அது எவ்வாறு தோன்றுகிறது?

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசன-மாத்மன:
காம: க்ரோதஸ்-ததா லோபஸ்-தஸ்மா-தேதத் த்ரயம் த்யஜேத் 21

காமம், குரோதம், லோபம், என்ற மூன்று வாயில்களை உடையது நரகம். இவைகள் ஆன்மாவை அழிப்பவைகள். ஜீவனை அதோகதிக்கு எடுத்துச் செல்பவைகள். எனவே அவைகள் மூன்றையும் விட்டு விட வேண்டும். இந்த மூன்றில்தான் அசுர சம்பத்து ஒட்டிக் கொண்டிருக்கிறது. இவற்றைத் துறப்பதால் என்ன இலாபம்?

ஏதைதர்-விமுக்த: கௌந்தேய தமோத்வாரைஸ்-த்ரிபிர்-நர:
ஆசரத்-யாத்மன: ஸ்ரேயஸ்-ததோ யாதி பராங் கதிம் 22

குந்தி மகனே ! இந்த மூன்று நரக வாயிலின்றும் விடுபட்டவன் தனக்கு நலன் செய்து கொண்டு இதன் மூலம் பரமகதி என்ற என்னை வந்து அடைகிறான். இந்த மூன்று விகாரங்களை விட்ட பின்புதான் மனிதன்

நியமிக்கப்பட்ட கர்மத்தைச் செய்கிறான். அதன் பலனாக பரம நன்மையை அடைகிறான்.

ய: சாஸ்த்ரவிதி-முத்ஸ்ருஜ்ய வர்த்ததே காம-காரத:
ந ஸ ஸித்தி-மவாப்னோதி ந ஸுகம் ந பராங் கதிம் 23

எந்த மனிதன் மேற்கூறிய சாஸ்திர விதிகளை மீறி (அதாவது அந்த சாஸ்திரம் வேறு சாஸ்திரம் அன்று. ஸ்ரீ கிருஷ்ணர் கூறிய கீதைதான் பூர்ண சாஸ்திரம். எனவே அவர் கூறிய விதிகளை மீறி) தன்னிச்சையாக நடக்கிறானோ அவன் சித்தி அடைய மாட்டான். பரம கதியை அடையமாட்டான். சுகத்தையும் பெற மாட்டான்.

தஸ்மாச்-சாஸ்த்ரம்-ப்ரமாணம் தே கார்யாகார்ய-வ்யவஸ்த்திதௌ
ஜ்ஞாத்வா சாஸ்த்ரவிதானோக்தம் கர்ம. கர்த்து-மிஹார்ஹஸி 24

எனவே அர்ஜுனா! எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்ற செய்யத் தகுந்ததையும், செய்யத் தகாதையும் நிச்சயிப்பதில் சாஸ்திரம்தான் உனக்குப் பிரமாணம் ஆகிறது. அங்ஙனம் அறிந்து சாஸ்திர விதிகளின் படி நியமிக்கப்பட்ட கர்மமே நீ செய்யத் தகுந்த கர்மமாகும்.

மூன்றாவது அத்தியாயத்தில் யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர், ''நியமிக்கப்பட்ட கர்மத்தைச் செய்'' என்று வலியுறுத்தி வேள்வியின் விதிமுறைதான் நியமித்த கர்மம் என்றும், அந்த வேள்வி ஆராதனையின் சிறப்பு விதியின் வர்ணனையாகுமென்றும், எவன் மனத்தை எப்பொழுதும் கட்டுப்பாட்டில் வைக்கிறானோ அவன் நிரந்தரமான பிரம்மத்தில் நுழைகிறான் என்றும் கூறினார்.

இங்கு அவர் கூறுகிறார் : காமம், குரோதம், லோபம் நரகத்தின் மூன்று துவாரங்கள். இந்த மூன்றையும் துறந்த பின்தான் அந்தக் கர்மம் (நியமித்த கர்மம்) தொடங்குகிறது. அதுவே பரம நன்மையும், மங்கலத்தையும் தருவது என்று நான் அடிக்கடி கூறியிருக்கிறேன். வெளி உலக காரியங்களில் எப்படி ஈடுபடுகிறோமோ அதைவிட அதிகமாக காமம், குரோதம், லோபம் அலங்கரித்தபடி தம்முன் தோன்றுகிறது. காம-குரோத- லோபத்தைத் துறந்த பின் தான் கர்மத்தில் நுழைய முடியும். கர்மம் அனுஷ்டானத்தில் கலந்து விடுகிறது. எவன் இந்த விதியைத் துறந்து தன்னிச்சையாக நடக்கிறானோ அவனுக்கு சுகம், சித்தி அல்லது பரமகதி எதுவும் கிடைப்பதில்லை. செய்யத் தகுந்தது, செய்யத்தகாதது என்பதை நிர்ணயிக்க சாஸ்திரம் ஒன்றுதான் பிரமாணம் ஆகிறது. எனவே, சாஸ்திர விதிகளின்படி கர்மம் செய்வதுதான் விரும்பத்தக்கது. அந்த சாஸ்திரம் 'கீதை'தான்.

முடிவுரை :

இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் தெய்வீக சம்பத்தை விரிவாக வர்ணித்தார். தியானத்தின் நிலை, எல்லாவற்றையும் சமர்ப்பணமாக்குதல், உள்ளத் தூய்மை, புலன்களைக் கட்டுப்படுத்துதல், மனத்தைக் கட்டுப்படுத்துதல், உருவத்தை நினைவூட்டும் – அத்யயனம், வேள்விகான முயற்சி, மனத்துடன் கூடிய புலன்களை அடக்குதல், கோபமின்மை, சித்தத்தின் சாந்த நிலை ஆகிய இஷ்ட தேவதையின் அருகில் சென்று யோக சாதனையில் நிலைத்த எந்த சாதகனாலும் அனுஷ்டிக்கத் தகுந்த இருபத்து ஆறு இலட்சணங்களைத் தெய்வீக சம்பத்தின் இலட்சணங்கள் என்று கூறினார். அது அம்ச உருவத்தில் உங்களிலும் இருக்கும், எவரிடமும் இருக்கும்.

அதற்குப் பிறகு அவர் அசுர சம்பத்தின் முக்கியமான நான்கு – ஆறு விகாரங்களின் பெயரைக் கூறினார். தற்பெருமை, அகங்காரம், கொடூரத் தன்மை, அஞ்ஞானம் ஆகியவற்றை இலட்சணங்களாகக் கூறி முடிவாக, அர்ஜுனா ! தெய்வீக சம்பத்து பூரண மோட்சத்திற் காகவும் பரமபதத்தைப் பெறுவதற்காகவும் ஏற்பட்டது. அசுர சம்பத்து பந்தத்திற்காகவும், நாசத்திற்காகவும் ஏற்பட்டது என்று எடுத்துரைத்தார். அர்ஜுனா ! நீ வருந்தாதே ! ஏனெனில் நீ தெய்வீக சம்பத்தைப் பெற்றவன்.

இந்த சம்பத்துகள் எங்கு இருக்கின்றன? இதற்கு அவர் கூறினார் : இந்த உலகத்தில் மனிதர்களுக்கு இரண்டு வகையான சுபாவங்கள் இருக்கின்றன — தேவர்கள் போலவும் அசுரர்கள் போலவும் தெய்வீக சம்பத்துகள் அதிக அளவில் இருக்கும்போது மனிதன் தேவர்கள் போன்று வாழ்கிறான். அசுர சம்பத்துகள் அதிக அளவில் இருக்கும்போது மனிதன் அசுரர்களைப் போல வாழ்கிறான். சிருஷ்டியில் மனிதர்களின் இரண்டு சாதிகள் இருக்கின்றன. அவன் எங்கு பிறந்தாலும், எப்படியிருந்தாலும் இந்த இரண்டு பிரிவில் ஒன்றைச் சார்ந்தவனாக இருக்கிறான்.

அதன் பிறகு அசுர சுபாவத்தைக் கொண்ட மனிதர்களின் இலட்சணங்களைக் கூறினார். அசுர சம்பத்தைப் பெற்ற மனிதன் செய்யத் தகுந்தவற்றை அறிந்து செய்ய மாட்டான். செய்யத் தகாதவற்றை அறிந்து செய்யாமல் இருக்கமாட்டான். கர்மத்தில் ஈடுபடாத நிலையில் அவனிடம் சத்தியமோ, தூய்மையோ, அனுஷ்டானமோ இருப்பதில்லை. அவன் கருத்துப்படி உலகம் ஆதாரமற்றது, ஈஸ்வரனால் அன்றி ஸ்திரீ-புருஷ சம்போகத்தினால் தானே தோன்றியது. எனவே உலகம் போகத்தை அனுபவிக்க மட்டுமே தோன்றியது. இதற்கு மேலே ஒன்றுமேயில்லை. என்பதாகும். இந்த கருத்து ஸ்ரீ கிருஷ்ணரின் காலத்திலும் இருந்தது. இப்பொழுதும் இருக்கிறது. ஜைன, பௌத்தர்கள் கூறியது என்பதல்ல. எதுவரை மக்களிடம் தெய்வீக — அசுர சம்பத்தின் ஏற்றம் - இறக்கம் இருக்கிறதோ அதுவரை இந்தக் கருத்தும் நிலவும். ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார்

— ''அந்த மந்த புத்தியும், கொடூரத் தன்மையும் பொருந்திய மனிதர்கள் எல்லோரின் தீமைக்காக (நன்மையை அழிக்கவும்) மட்டுமே இந்த உலகில் பிறக்கிறார்கள். என்னால் இந்தப் பகைவன் கொல்லப்பட்டான், அவனையும் கொல்வேன் என்று கூறுகிறார்கள். அர்ஜுனா ! இவ்வாறு காம குரோதத்தில் நிலைத்திருக்கும் அந்தப் புருஷர்கள் பகைவர்களைக் கொல்வதில்லை. தம் உடலுக்குள்ளும் மற்றவர்களது உடலினுள்ளும் இருக்கும் பரமாத்மாவாகிய என்னை வெறுப்பவர்கள்''. அர்ஜுனன் சபதமிட்டு ஜயத்ரதன் போன்றவர்களைக் கொன்றானா? அவ்வாறு கொன்றால் அவன் அசுர சம்பத்து உடையவன் அன்றோ? அந்தப் பரமாத்மாவை வெறுப்பவன் அன்றோ? ஆனால் ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனிடம் 'நீ தெய்வீக சம்பத்தைப் பெற்றிருப்பவன். எனவே வருந்தாதே !' என்றல்லவா கூறுகிறார்.

யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் மறுபடியும் அசுரத் தன்மை யுடைய கொடூர மனிதர்களை நான் மீண்டும் மீண்டும் நரகத்தில் ஆழ்த்துகிறேன் என்று கூறினார். நரகத்தின் உருவம் என்ன என்பதற்கு அவர் மீண்டும் மீண்டும் கீழ்த்தரமான நீச யோனிகளில் தோன்றுவதும் நரகமும் ஒன்றுக் கொன்று சமமானவையாகும். இதுதான் நரகத்தின் உருவம். காமம், குரோதம், லோபம் இம்மூன்றும்தான் நரகத்தின் மூல வாயில்களாகும். இந்த மூன்றில் அசுர சம்பத்துகள் தொற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த மூன்றையும் துறந்ததும் கர்மம் தொடங்குகிறது என்று நான் கூறியிருக்கிறேன் என்கிறார். கர்மமானது காமம், குரோதம், லோபத்தைத் துறந்ததும் தொடங்கும் பொருளாகும். உலக விவகாரங்களில் வரையறைக்குள் நின்று சமுதாய நிலையங்களின் நிர்வாகத்தில் ஈடுபட்டிருப்பவர்களிடமும் காமம், குரோதம், லோபம் வெளிப்பூச்சுடன் அலங்கரிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இந்த மூன்றையும் துறந்த பின்தான் பரமாத்மாவின் நுழைவு பெற்றுத் தரும் நியமிக்கப்பட்ட கர்மங்களில் நுழைவு செய்ய முடிகிறது. எனவே, எதைச் செய்வது, எதைச் செய்யக் கூடாது -- செய்யத் தகுந்தவற்றையும், செய்யத்தகாதவற்றையும் முறையாக அறிந்து கொள்ள சாஸ்திரமே பிரமாணம் ஆகிறது. எந்த சாஸ்திரம் என்றால் அதுதான் கீதை சாஸ்திரம். எனவே, ''இந்த சாஸ்திரத்தின் மூலம் நியமிக்கப்பட்ட சிறந்த கர்மத்தை (யதார்த்த கர்மத்தை) நீ செய்'' என்றும் கூறுகிறார்.

இந்த அத்தியாயத்தில் யோகேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணர் தெய்வீக அசுர சம்பத்துகளை விரிவாக வர்ணித்தார். அவற்றின் இருப்பிடம் மனித இதயம் என்று கூறி அவற்றின் பலனையும் கூறினார். இவ்வாறு,

பிரம்ம வித்தையைப் புகட்டுவதும், யோக சாஸ்திரமானதும், ஸ்ரீ கிருஷ்ணர் — அர்ஜுன உரையாடலாக வந்துள்ளதுமாகிய ஸ்ரீமத் பகவத் கீதை என்னும் உபநிஷதத்தில் 'தேவாசுர சம்பத்து விபாக யோகம்' என்ற பதினாறாவது அத்தியாயம் நிறைவு பெறுகிறது.

இவ்வாறு ஸ்ரீமத் பரமஹம்ஸ பரமானந்தர் அவர்களின் சீடரான சுவாமி அட்கடாநந்தர் இயற்றிய ஸ்ரீமத் பகவத் கீதையின் உரையான ''யதார்த்த கீதை''யில் 'தேவாசுர சம்பத்து விபாக யோகம்' என்ற பதினாறாவது அத்தியாயம் நிறைவு பெறுகிறது.